மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**அசல் வழக்கு எண். 18 /2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr –III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : முத்து (வா.சா. 2) | சாதி : |
| த/பெ. | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

**06.04.2026.**

**குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 வது ஆவணம் 04.10.2015 ஆம் தேதியிட்டது என்றால் சரிதான் . மேற்படி ஆவணம் நான்பெட்டிக்கடை வைத்தவுடன் கொடுக்கப்பட்ட ரசீது என்றால் சரிதான் ஆனால் அதற்கு முன்னரே நான் கடையை வைத்து நடத்தி வருகிறேன். நான் வழக்கிற்காக பொய்யான சாட்சியமளிக்கின்றேன் என்றும், உண்மையில் நான் 2015 ஆம் ஆண்டிற்கு முன்பு கடை வைத்திருந்தால் அதற்கு உண்டான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும் 2015ம் தேதி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதால் 2015 ஆம் ஆண்டிலிருந்து தான் நான் கடை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்னரே நான் கடை வைத்து நடத்தி வருகிறேன். வா.சா.ஆ.5 ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ள மாநாடு என்பவர் எனது உறவினர் என்றால் சரிதான். நான் வேறு சில தொழில் வரி ரசீதுகலோ கடை நடத்துவதற்கு ஆதரவாக ரசீதுகலோ தாக்கல் செய்யவில்லை என்றும், நான் கடை வைத்து நடத்தி வருவதற்கு ஆதரவாக ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. சந்திரன் என்பவர் நான் வைத்து நடத்தி வரும் கடை

ஆக்கிரமிப்பு என்று 2015 ஆம் ஆண்டு அகற்ற சொல்லி மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் எனக்கு அந்த விஷயம் சிறிது காலம் கழித்து தான் தெரியவந்தது. அதேபோல் நான் வழக்கு தாக்குதல் பின்பு தான் அவர் ஆக்கிரமிப்பு என்று மனு தாக்கல் செய்துள்ளார். 1 ம் பிரதிவாதி அறிவிப்பு அனுப்பிய பின்பு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று எனது பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01.10.2015 ஆம் தேதியிட்ட அறிவிப்பை ஒன்றாம் பிரதிவாதி எனக்கு அனுப்பிய பின்பு எனது உறவினர் மூலம் வா.சா.ஆ.5 ம் ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்திக் கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை 05.10.2015 ஆம் தேதி தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் மட்டும் தான் தரப்பிகளாக காட்டினேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இடைகால உறுத்து கட்டளை மனுவில் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் உறுத்து கட்டளை பொறுத்துக் இடைகால மனுவில் Status Quo கொடுப்பதற்கு தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்து ஒப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி கொடுத்த மனுவின் பேரில் அரசாங்க அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையின் பெயரில் அரசாங்க அதிகாரிகள் போட்ட உத்தரவு பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி உத்தரவு பிறப்பித்தும் அதை அகற்றாத அரசாங்க அதிகாரிகள் மீது ஐந்தாம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் என்னையும் ஒரு தரப்பினராக Writ petition தாக்கல் செய்தார் என்றால் சரிதான். ஐந்தாம் பிரதிவாதி தாக்கல் செய்த Writ petition ல் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜர் ஆகினேனா என்றால் நான் அந்த வழக்கில் ஆஜராகவில்லை, வழக்கறிஞரையும் வைக்கவில்லை. ஒரே பத்திரத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு

பகுதிகள் ஆன வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை எங்களுக்கு சொந்தமானது என்று நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.1 வடக்கு பகுதி சம்பந்தமாக என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவர் அளித்த சாட்சியம் பற்றி எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் அவர் என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்கு தெரியாததால் நான் ஆட்சேபனை எவ்வாறு தெரிவிப்பது. தாவா சொத்து சர்வே எண்.197/27 ல் கட்டுப்பட்ட 11.5 Hectare அரசாங்க புறம்போக்கு என்று வருவாய் ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள பகுதி என்றால் சரியல்ல. சர்வே எண்.197/27 ல் தான் பெரிய கருப்பணசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். ஒரு சில காலங்கள் பிறகு சாமி கும்பிடுவதில் பிரச்சனை ஏற்பட்டு சின்ன கருப்பண்ணசாமி கோவில் என்று சர்வே எண்.197/27 தனியாக கோவில் கட்டப்பட்டது என்றால் சரிதான். சின்ன கருப்பசாமி கோவிலுக்கு தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண் 197/28 என்று பட்டா கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. நான் சின்ன கருப்புசாமி கோவில் கும்பிடும் பங்காளி தான் என்றால் சரிதான். எங்கள் பங்காளிகள் சேர்ந்து மனு கொடுத்து அதன் அடிப்படையில் ஏற்பட்ட உத்தரவு பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானோ அல்லது மற்ற பங்காளிகளோ 1922 ம் ஆண்டு பத்திரத்தை பற்றி விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. கோவில் சொத்து சம்பந்தமான பிரச்சினை ஊரறிய அனைவருக்கும் தெரிந்தது என்றும் அப்போதெல்லாம் நானும் பங்காளிகளோ 1922 ஆம் ஆண்டு பத்திரத்தை பற்றி எதுவும் கூறாமல் இருந்துவிட்டு தற்போது தான் பத்திரத்தை வைத்திருக்க உரிமையை கூறுகிறோம் என்றால் அப்போது 1922 ஆம் ஆண்டு பத்திரத்தை பற்றி கூறினோம். எங்கள் பத்திரத்தை பற்றி அரசாங்க அதிகாரிகள் கூறிய பின்னர் அரசாங்க அதிகாரிகள் உத்தரவு ஏதும் பிறப்பித்தார்களா என்றால் அதைப் பற்றி

எனக்கு தெரியவில்லை. எனக்கு 1922 ஆம் ஆண்டு, 1957 ஆம் ஆண்டு பத்திரத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் எனக்கு தாவா இடத்தில் உள்ள வீடு பற்றியும் அனுபவம் பற்றியும் ஏதும் தெரியாது என்றால் வீடு பற்றி எனக்கு நேரடியாக ஆனால் அனுபவம் பற்றி எனக்கு தெரியும் நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். தாவா இடத்தில் ஆக்கிரமிப்பு தவிர்த்து வேறு எந்த அனுபவம் செய்யவில்லை என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, நாங்கள் அந்த இடத்தில் ஆடு மாடு கட்டி அனுபவித்து வருகிறோம். நான் 2015 ம் ஆண்டு முதல் கடை வைத்து நடத்ததவில்லை என்றால் 2017 ம் ஆண்டு வரை கடை வைத்து நடத்தி வந்தேன் என்று சாட்சி கூறிவிட்டு பின்னர்,சாட்சி தானாக முன் வந்து 2024 ம் ஆண்டு வரை கடை வைத்து நடத்தி வருகிறேன் என்று கூறிகிறார். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளக்க வந்தபோது நான் அங்கு தான் இருந்தேன் என்றால் சரிதான்.நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தாவா இடத்தில் உள்ள பெட்டிக்கடை பூட்டப்பட்டிருந்தது என்று கூறியுள்ளார் என்றால் சரிதான் இடத்தை அளக்க வந்தபோது நான் அதை பார்க்க வந்துவிட்டதால் கடையை பூட்டி விட்டேன். தாவா சொத்தில் Hallo Block கல் பதிக்க அரசாங்கம் உத்தரவை பிறப்பித்தும் நான் தாக்கல் செய்துள்ள இடைக்கால உறுத்து கட்டளை கொடுத்து அரசாங்கம் Status Quo கொடுப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்ததால் தற்போது வரை இந்த இடத்தில் கல்லை பதிக்க இயலாமல் உள்ளது என்றால் அது எனது இடம் ஆகும். நான் உரிமை கோரும் பத்திரத்தின் மூலம் என் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் என் பேரில் பட்டா ஏற்படுவதற்காக மனு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பட்டா கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் மனு தாக்கல் செய்தேன். நான் பட்டா மாறுதல்

கோரி விண்ணப்பித்த மனுவை நீதிமன்றத்தின் தாக்கல் செய்யவில்லை என்றால் அப்போதெல்லாம் எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது அந்த மனு எங்கே போய்விட்டது என்று தெரியாது. இந்த வழக்கில் கிராமத்தின் பிரதிநிதியாக 4 முதல் 8 பிரதிவாதிகள் தங்களை கிராமத்தின் பிரதிநிதியாக சேர்த்துக் கொள்ள மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். 4 முதல் 8 பிரதிவாதிகள் கிராமத்தின் பிரதிநிதியாக உள்ளது எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து சின்ன கருப்பண்ணசாமி கோவில் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் ஊர் திருவிழாவின்போது அந்த இடத்தில் தான் கடை வைத்து நடத்துவார்கள் என்றும் நானும் எனது பங்காளிகளோ எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒன்றாம் பிரதிவாதி ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி உத்தரவு தெரிவித்ததால் அரசாங்க உத்தரவுகளை மதிக்காமல் தப்பிக்க வேண்டும் என்று எண்ணி இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்தேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை நான் சரியாக மதிப்பீடு செய்யவில்லை என்றும் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு அனுபவமோ உரிமையே இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஏற்படுத்திய ஆக்கிரமிப்பை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நானும் என்னோட பங்காளிகளும் ஒரே நாளில் இரண்டு வழக்குகளை தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரியல்ல. எனது மற்றொரு பங்காளி தாக்கல் செய்த வழக்கில் அவர் என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்கு நன்கு தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய்யாக தெரியாது என்று சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.